3. ஒத்திவைப்புத் தீர்மானம்

எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுத பணம் கட்டிய மாணவர்கள் சிலருக்குத் தேர்வு எழுத எண், ஹால் டிக்கெட் கொடுக்கப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம் திருவாளர்கள் மு. அப்பாதுரை, எம். ஆறுமுகம், மு. அம்பிகாபதி ஆகியோர் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுத பணம் கட்டிய மாணவர்களுக்குச் சரியான ஹால் டிக்கட் கொடுக்கப்படாததாலும் தேர்வு எண் கொடுக்கப்படாததாலும் மாணவர்கள் தேர்வு எழுதாமல் பாதிக்கப்பட்டுள்ளதால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதியை கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை சுருக்கமாக விளக்கவேண்டும்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ் நாட்டில் உயர்நிலைப் பள்ளிகளுக்கான தேர்வுக்காக விண்ணப்பித்துள்ள பல மாணவர்களின் தேர்வுகளுக்கான ஹால் டிக்கட் நம்பர் வராத காரணத்தால், பல மாணவர்கள் இன்றைக்குத் தேர்வு எழுத முடியாத நிலைமையில் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை கல்வித் துறையில் ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தமிழகத்தில் பல இலட்சக்கணக்கான மாணவர்கள் தேர்வு எழுதக்கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் பல மாணவர்களுடைய வாழ்க்கை பிரச்சினை அதில் அடங்கி இருக்கிற காரணத்தால் அது போன்ற பல சம்பவங்கள் இன்னும் தொடர்ந்து அந்த கல்வித் துறையில் இருக்கிற காரணத்தால் இருக்கிற நிலையைக்கருதி அப்படிப்பட்ட தவறுகள் வருங்காலத்தில் நிகழாமல் இருப்பதற்கும் பாதிக்கப்பட்ட மாணவர்களுடைய தேர்வைப்பற்றி ஆழமாகப் பரிசீலித்து அந்த மாணவர்களுடைய வாழ்வைப் பறிக்கக்கூடிய ஒரு விஷயமாக இருக்கிற காரணத்தாலும், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்ச் 1981 எஸ். எஸ். எல். சி. பொதுத் தேர்வுக்கு 50,777 மாணவ மாணவிகள் தனித்தேர்வாளர்களாக விண்ணப்பம் செய்திருந்தனர். அவர்கள் அனைவருக்கும், அவர்களின் விண்ணப்பங்களில் கொடுத்திருந்த முகவரிக்கு உரிய காலத்தில் கம்ப்யூட்டரில் அச்சிடப்பட்ட தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. தனித்தேர்வாளர்

கள் நுழைவுச் சீட்டுகளைப் பெற்றுத் தேர்வு மையங்களில் 24--3--1981 முதல் தேர்வுகளை எழுதி வருகின்றனர். ஆண்டு தோறும் உள்ள நடைமுறைப்படி இவ்வாண்டும் நுழைவுச் சீட்டு கள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. எம்முறையிலும் நுழைவுச் சீட்டுப் பெறாத தனித் தேர்வாளர்கள் தேர்வு எழுத இயலாமை பற்றி இதுவரை தேர்வுத் துறை இயக்ககத்திற்கு நேரிலோ, மடல் மூலமோ எவ்வித முறையீடும் வரவில்லை. அரசுத் தேர்வுகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்ட சில தனித் தேர்வாளர்களுக்கு பதிவெண்களும், தேர்வு மையமும் உடனுக்குடன் தந்தி மூலமும், மடல் மூலமும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தேர்வு மையத் தலைமைக் கண்காணிப்பாளர்களுக்கும் நுழைவுச் சீட்டின்றி வரும் தனித் தேர்வாளர்களை தேர்வுக்கு அனுமதிக்குமாறு ஆணையும் அறிவுரையும் வழங்கப்பட்டுள்ளது. நுழைவுச்சீட்டுப் பெறாதவர்கள் நேரில் தேர்வு மையங்கட்குச் சென்று தலைமை கண்காணிப்பாளரிடம் ஒரு வேண்டுகோளும் உறுதிமொழியும் கொடுத்தால் அவற்றின் அடிப்படையில் அவர் கள் தேர்வு எழுத வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

சில தனித் தேர்வாளர்கள் தங்கள் விண்ணப்பங்களில் முகவரி களைக் கொடுக்கத் தவறிவிட்டுள்ளனர். சிலர் தவறான முக வரிகளை அளித்துள்ளனர். அச்சிலரின் முகவரி இல்லாமையால் அவர்களோடு தொடர்பு கொள்ளவோ, அவர்களின் சரியான முகவரிகளை அறிந்து நுழைவுச் சீட்டுகளை அனுப்பவோ இயல வில்லை.

விண்ணப்பத்திற்குரிய கடைசி நாளுக்குப் பிறகு பல வாரங்கள் கழித்தும் சில விண்ணப்பங்கள் வந்துள்ளன. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கூடத் தனித் தேர்வாளர்களுக்கு நுழைவுச்சீட்டு களையும் அவர்கள் பெயர் முதலிய விவரங்களையும், அவர்கள் தேர்வு எழுத வேண்டிய மையத் தலைமையாசிரியர் அல்லது தலைமைக்கண்காணிப்பாளருக்கு அனுப்பி, இத்தனித் தேர்வாளர் கள் நேரில் வரும்போது அவர்களிடம் நுழைவுச் சீட்டுகளைக் கொடுத்து அவர்களைத் தேர்வுக்கு அனுமதிக்குமாறும் அறிவுறுத் தப்பட்டுள்ளது. தனித் தேர்வாளர்கள் தேர்வு எழுதும் வாய்ப்பு இழக்காமலிருக்க எல்லா ஏற்பாடுகளும் போதிய முன்னெச்சரிக் கையாக செய்யப்பட்டுள்ளது.

பள்ளியில் பயின்று எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதும் மாணவர் களைப் பொறுத்த மட்டில் தலைமையாசிரியர் மூலம கப் பெயர் பட்டியல் அனுப்பப்படுகிறது. அவர்களுக்குத் தனியே நுழைவுச் சீட்டுகள் அளிப்பது இல்லை.

1981 ஏப்ரல் 4] [திரு. செ. அரங்கநாயகம்]

நுழைவுச் சீட்டு கிடைக்கவில்லை என்ற குறைபாடு பிரைவேட் கேண்டிடேட்ஸுக்கு சில இடங்களில் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இல்லை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன்

கல்வி இலாகாவில் சில விதிமுறைகள் வைத்து இருக்கிறார்கள். அவைகள் பின்பற்றப்பட வேண்டும். அதைப் பின்பற்றத் தவறிவிடுவோமானால் ஒருவருக்குப் பதில் இன்னொருவர் பரிட்சை எழுத நேரிடும். பிறகு அந்தத் தேர்வே அர்த்தமற்றதாகிவிடும். அந்தத் தேர்வுத் துறை இயக்ககத்திற்கு யார்யார் தேர்வு எழுத விண்ணப்பித்து இருந்தார்களோ அவர்களுக்கு எல்லாம் நுழைவுச் சீட்டு அனுப்பப்பட்டுள்ளது. நுழைவுச் சீட்டு பெறாதவர்கள் கூட நேரில் தேர்வு மையங்களுக்குச் சென்று அதற்கான விண்ணப்பத்தையும், உறுதிமொழியையும், கொடுத்தால், தேர்வு எழுதும் வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. அதற்கான எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கிறது. நுழைவுச்சீட்டு கிடைக்கவில்லை என்று எந்தவிதமான புகாரும் இதுவரையில் வரவில்லை. பள்ளிகளில் படித்து பரிட்சை எழுதுகிற மாணவர்களைப் பொறுத்தவரையில், தலைமையாசிரியர்கள் மூலம் நுழைவுச் சீட்டுகள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, இதிலே எந்தவிதமான தவறும் ஏற்படவில்லை. எனவே இந்தப்பிரச்சினை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவன ஈர்ப்புகள்

அ. கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழியில் ஏற்பட்ட தீ விபத்து

திரு. சு. முத்துகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழியில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக ஆதிதிராவிடர்களுக்குச் சொந்தமான **113** வீடுகள் சேதமுற்றது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.